தினமணி

## 12-வது நாளாக வேலைநிறுத்தம்: 10 லட்சம் டன் கரும்பு பாதிப்பு

First Published : 16 Apr 2012 01:31:38 AM IST

வேலூர், ஏப். 15: தமிழகத்தில் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தொடரும் வேலை நிறுத்தப் போராட்டத்தால் 10 லட்சம் டன் கரும்புகள் காய்ந்து பிழிதிறன் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கரும்பு விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் ஊதிய உயர்வு வழங்க வலியுறுத்தி இம்மாதம் 4-ம் தேதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 12-வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் இவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இம்மாத தொடக்கத்தில் வெட்டப்பட்ட கரும்புகள் லாரிகளில் ஏற்றப்பட்டு கரும்பு ஆலை வளாகங்களுக்கு வந்திருந்த நிலையில், ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடங்கியது. இதனால் நூற்றுக்கணக்கான லாரிகளில் இருந்தக் கரும்புகள் காயத் தொடங்கியதை அடுத்து அவை தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கரும்பு ஆலைகளுக்கு பதிவு செய்த கரும்புகள் 11 மாத இறுதியில் நல்ல பிழிதிறன் கொண்டதாக இருக்கும். இந் நிலையில் தமிழகத்தில் தொடரும் இந்த வேலை நிறுத்தம் காரணமாக சராசரியாக ஆலை ஒன்றுக்கு 50 முதல் 60 ஆயிரம் டன் கரும்பு 14 மாதங்களைக் கடந்தும் இன்னமும் வெட்டப்படாமல் நிலங்களில் காய்ந்து வருகின்றன. இதனால் சுமார் 10 லட்சம் டன் கரும்புக்கு பிழிதிறன் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சி.கே. தனபால் தெரிவித்தார். தற்போதைய நிலையில், தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு நிலுவையில் உள்ள கரும்பு அரவையை நிறைவு செய்ய வேண்டும். பின்னர் அவர்களின் கோரிக்கைக்காக விவசாய சங்கங்களே களத்தில் இறங்கி போராடத் தயார் என்றார் சி.கே. தனபால். விவசாயிகளின் கோரிக்கை தொடர்பாக தமிழ்நாடு சர்க்கரை ஆலை தொழிலாளர் சம்மேளனம் (ஏஐடியுசி) பொதுச் செயலர் கு.மனோகரன் கூறியது:

தொழிற்சங்கங்களின் இந்த வேலை நிறுத்தம் திடீர் போராட்டமல்ல. ஊதிய உயர்வுக்காக 10 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வருகிறோம். இதுவரை சொற்ப ஊதிய உயர்வு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சர்க்கரை துறை நிர்வாகம் முன்மொழிந்த ஊதிய உயர்வை

அரசு அளிக்க இப்போதாவது முன் வரவேண்டும். விவசாயிகள் இன்றி நாங்கள் இல்லை. இப்போராட்டம் விவசாயிகளுக்கு எதிரானதும் அல்ல. விவசாயச் சங்கங்கள் முன்வந்து இப்பிரச்னையை அரசிடம் கொண்டு சென்று சுமுக தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார் மனோகரன்.

இதுகுறித்து சர்க்கரை ஆலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் மோகனம் கூறியது:


தமிழகத்தில் 15 கூட்டுறவு ஆலைகள், 2 பொதுத் துறை ஆலைகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. நாள்தோறும் 47 ஆயிரம் டன் கரும்பு அரவை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 45 ஆயிரம் மூட்டைகள் சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதனால் நாள்தோறும் ரூ.13.5 கோடி இழப்பு ஏற்படுகிறது. அதேபோல் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஆலைகளில் 15 மெகாவாட் மின்சார உற்பத்தியும் தடைபட்டுள்ளது. இந் நிலையில் அரசு, தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, ஊதிய உயர்வை அளித்து, நீண்டகால போராட்டத்துக்கு முடிவு காண வேண்டும் என்றார்.

இன்று ஆர்ப்பாட்டம்: அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாவட்டத் தலைநகரங்களில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு: முதல்வர் உத்தரவு

First Published : 16 Apr 2012 01:11:50 AM IST



சென்னை, ஏப். 15: ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து முதல்போக பாசனத்துக்காக திங்கள்கிழமை (ஏப்ரல் 16) முதல் தண்ணீர் திறந்து விடப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பவானிசாகர் அணையிலிருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

 அவர்களின் கோரிக்கையை ஏற்று கோபிச்செட்டிபாளையம் மற்றும் பவானி வட்டங்களில் உள்ள அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களின் வழியாக முதல்போக பாசனத்துக்காக பவானிசாகர் அணையிலிருந்து திங்கள்கிழமை முதல் தண்ணீர் திறந்து விடப்படும்.
 இதனால் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 24,504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## குமரி மாவட்டத்தில் பலத்த மழை

First Published : 16 Apr 2012 01:16:56 AM IST



குலசேகரம், ஏப். 15: கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது.
 மாவட்டத்தின் மலையோரப் பகுதிகளில் சில நாள்களாக மிதமான மழை பெய்து வந்தது. ஞாயிற்றுக்கிழமை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.
 பேச்சிப்பாறை, சிற்றாறு, பெருஞ்சாணி, குலசேகரம், திருவட்டார், அருமனை உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழை இருந்தது. களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் மிதமான மழை பெய்தது.
 மழை பெய்து வருவதால் வாழை, மரச்சீனி, ரப்பர் விவசாயிகள் விவசாயப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். பெரும்பாலான பகுதிகளில் மரச்சீனி நடவு தீவிரமடைந்து வருகிறது.
 ரப்பர் பால்வெட்டு தொடங்கியுள்ள நிலையில் ரப்பருக்கு உரமிடும் பணிகளும் தீவிரமடைந்துள்ளன.
 மழையின் காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளம் சற்று அதிகரித்துள்ளது. வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்கள் விடுமுறையாக இருந்ததால் அருவிக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

## "அரசு திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'

First Published : 15 Apr 2012 02:25:19 PM IST

குளித்தலை, ஏப். 14: தமிழக அரசு கொண்டு வரும் திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். காமராஜ் தெரிவித்தார்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டார வேளாண்மைத் துறை மற்றும் சகோதரத் துறைகள் சார்பில், உழவர் பெருவிழா பிச்சம்பட்டியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை வழங்கி அவர் மேலும் பேசியது:

தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடனும், இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்தும் நோக்குடனும் முதல்வர் ஜெயலலிதா, பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை அறிவித்துள்ளார்.

புதிய தொழில்நுட்பங்களைக் கொண்ட இயந்திரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்ய வேளாண்மைத் துறை மூலம் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே, வேளாண்மைத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழக அரசு கொண்டு வரும் திட்டங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை திட்டங்கள் குறித்து வேளாண்மைப் பொறியாளர்கள் அஜ்மல், கணேசன், கலா ஆகியோர் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

வேளாண்மைத் துறை மூலம் கிருஷ்ணராயபுரம் பகுதியில் தினசரி ஒரு வருவாய் கிராமம் வீதம் 30 கிராமங்களில் இந்த உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது.

இதில் வேளாண் துறை அலுவலர்கள் நேரில் சென்று, இரண்டாம் கட்ட பசுமை புரட்சியை ஏற்படுத்தத் தேவையான ஆலோசனைகள், திட்டங்கள் குறித்து விளக்க உள்ளனர்.

## ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ரூ. 14.39 லட்சம் பருத்தி விற்பனை

First Published : 15 Apr 2012 02:31:20 PM IST

பெரம்பலூர், ஏப். 14: பெரம்பலூர் மாவட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், ரூ. 14.39 லட்சம் மதிப்பிலான பருத்தி விற்பனையானது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் வடக்கு மாதவி சாலையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏல விற்பனை முறையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட

அவர் மேலும் கூறியது: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை தோறும் விவசாயிகளின் வேளாண் விளை பொருள்கள் விற்பனை நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமை அன்று தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு அரசு விடுமுறையாக இருப்பினும், விவசாயிகளின் நலன் கருதி ஏலம் நடைபெற்றது.

இதில், விவசாயிகள் கொண்டு வந்த 1,013 பருத்தி மூட்டைகள் விற்று தரப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 14.39 லட்சமாகும். பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 4,029-க்கு விற்பனையானது. எனவே, வாரந்தோறும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறும் விற்பனையில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகிய விளைபொருள்களை விற்று விவசாயிகள் பயன்பெறலாம் என்றார் அவர்.

இந்த ஆய்வின்போது, பெரம்பலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இரா. தமிழ்ச்செல்வன், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.பி. மருதைராஜ், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் என். சேகர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு ரூ. 4 ஆயிரம் கோடி கடன் வழங்க ஆணை

First Published : 15 Apr 2012 02:33:23 PM IST

அரியலூர், ஏப். 14: தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு ரூ.4ஆயிரம் கோடி கடன் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது என்றார் அரியலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் துரை. மணிவேல்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம் எலந்தக்கூடம் ஊராட்சியில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில், விவசாயக் கையேட்டை வெளியிட்டு, விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி மேலும் அவர் பேசியது:

சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என இருந்ததை, திமுக ஆட்சியில் சுய நலத்துக்காக மாற்றப்பட்டது.

அப்போது, உலகத் தமிழர்கள் இதை எதிர்த்தனர். திமுக செய்த வரலாற்றுப் பிழையைத் திருத்தி, மீண்டும் சித்திரை 1-ம் தேதிதான் தமிழ்ப் புத்தாண்டு என அறிவித்தவர் ஜெயலலிதா.

மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் சித்திரை 1-ம் தேதியை, உழவர் பெருவிழாவாகக் கொண்டாட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசு விவசாயத் துறைக்கு ரூ. 5,834 கோடியை ஒதுக்கியுள்ளது. மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், ரூ. 4,000 கோடியை கடனாக வழங்க உத்தரவிட்டுள்ளது.

400 கூட்டுறவு சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

அரியலூர் பகுதியில் மட்டும் 9 இடங்களில் கூடுதலாக, நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

நிகழ்ச்சியில் திருமானூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் நா. சீனிவாசன், ஊராட்சி மன்றத் தலைவர் த. சுப்பிரமணியன், அரியலூர் கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் கி. லட்சுமணன், மாவட்ட நீர்வடிப் பகுதி மேலாண்மை உதவி இயக்குநர் கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக திருமானூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். லதா வரவேற்றார். வேளாண்மை அலுவலர் ஏ. அருள்ராஜ் நன்றி கூறினார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**தேங்காய் நார் விலை வீழ்ச்சியால் தொழிற்சாலைகள் பாதிப்பு**

ஏப்ரல் 16,2012,01:53



உடுமலை:ஏற்றுமதி வாய்ப்பு தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதால், தென்னை நார் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் உடுமலையில் நூற்றுக்கணக்கான தென்னை நார் தொழிற்சாலைகள் மூடப்படும்அபாயம் ஏற்பட்டுள்ளது.

**தென்னை சாகுபடி:**உடுமலை மற்றும் பொள்ளாச்சி சுற்றுப் பகுதிகளில் பல லட்சம் ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தென்னை சாகுபடி சார்ந்த தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலைகள் இப்பகுதிகளில் கடந்த 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றன.
1996ம் ஆண்டு முதல் தென்னை நாருக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்தன. சீனா மற்றும் ஜப்பான் நாடுகளில், மெத்தை தயாரிப்பு மட்டுமல்லாது, நிலச்சரிவு பகுதிகளில் தடுப்புச் சுவர் அமைக்க,சொட்டு நீர் பாசனம் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப பணிகளுக்கு, தென்னை நார் பயன்படுத்தப்படுகிறது.
இதற்கு தேவையான தென்னை நார், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. உள்ளூர் தென்னை நார் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைத்தது.உடுமலை மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் தென்னை நார் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்தது.
ஆண்டுதோறும் டிச., ஜன., ஆகிய இரு மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் ஆர்டர்கள் வந்து கொண்டே இருக்கும்.
இந்தஆண்டு பல்வேறு காரணங்களால், ஏப்ரல் மாதம் துவங்கியும் போதுமான ஆர்டர்கள் வரவில்லை. சீனாவுக்கு அனுப்பி வைக்கப்படும் நார் ஏற்றுமதி முற்றிலுமாக எந்த காரணமும் குறிப்பிடாமல் ரத்தானது. இதனால் தென்னை நாரின் விலை பல மடங்கு சரிந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்கு முன், 30 கிலோ கொண்ட மஞ்சள் நிற தென்னை நார் பண்டலுக்கு 320 ரூபாய் வரை விலை கிடைத்தது. இது, தற்போது, 180 ரூபாயாக குறைந்துள்ளது. இதனால் பல நார், தொழிற்சாலைகள் முடங்கியுள்ளன. ஏற்றுமதி ஆர்டர்களை எதிர்பார்த்து காத்திருந்த உற்பத்தியாளர்கள், தென்னை நார் முழுமையாக தேக்கமடைந்துள்ளதால் கடும் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

தேங்காய் நார் உற்பத்தியாளர் அர்ஜுனன் கூறியதாவது:கடந்த டிசம்பர் மாதம் வரை, 5 ஆயிரம் தேங்காய் மட்டைகள் கொண்ட ஒரு லோடு 5 ஆயிரம் ரூபாய்க்கு தென்னை நார் உற்பத்தியாளர்களால் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வந்தது.

**தேக்கம்:**நார் விலை குறைந்துள்ளதையடுத்து, மட்டை விலை ஒரு லோடு ஆயிரம் ரூபாயாக குறைந்தது போனது. இதனால் தென்னந்தோப்புகளில் மட்டை விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது. தென்னை நார் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து வருகின்றனர். இவ்வாறு அர்ஜுனன் கூறினார்.

## தாவர எண்ணெய் இறக்குமதி அதிகரிப்பு

ஏப்ரல் 15,2012,00:26



புதுடில்லி:சென்ற மார்ச் மாதத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, 7.27 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை விட, 67 சதவீதம் (4.35 லட்சம் டன்) அதிகமாகும் என, இந்திய எண்ணெய் உற்பத் தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைவு, இந்தோனேஷியாவில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரி குறைப்பு போன்ற காரணங்களால், சென்ற மார்ச் மாதத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி மிக அதிகளவில் அதிகரித்துள்ளது.நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்-அக்டோபர்), மார்ச் வரையிலான முதல் ஐந்து மாத காலத்தில், தாவர எண்ணெய் (சமையல் மற்றும் சமையல் சாராத எண்ணெய்) இறக்குமதி, 21 சதவீதம் உயர்ந்து, 31.28 லட்சம் டன்னிலிருந்து, 38 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.மதிப்பீட்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த தாவர எண்ணெய் இறக்குமதியில், சமையல் எண்ணெய் இறக்குமதி, 37 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில், 30.24 லட்சம் டன்னாக இருந்தது. அதேசமயம், சமையல் சாராத எண்ணெய் இறக்குமதி, 1.03 லட்சம் டன்னிலிருந்து, 83 ஆயிரத்து 890 டன்னாக குறைந்துள்ளது என, இந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## கணினி மூலம் விவசாயிகளுக்கு ஆலோசனை: வேளாண்மை பல்கலைக் கழகத்தினர் ஏற்பாடு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,02:56 IST

திண்டிவனம்:திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு தொடுதிரை கணினி மூலம் தகவல்கள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஆறாவது வேளாண் அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் நடந்தது. துணைவேந்தர் முருகேச பூபதி தலைமை தாங்கினார். அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சாத்தையா வரவேற்றார்.

அனைத்து விவசாய தகவல்களையும் தெரிந்து கொள்வதற்கான தொடுதிரை கணினி பயன்பாட்டை துணை வேந்தர் முருகேச பூபதி துவக்கி வைத்தார்.

தொடர்ந்து விவசாயிகளுக்கு இடு பொருட்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கியதுடன், பட்டயபடிப்பில் சிறந்த மாணவர்களுக்கு பரிசு வழங்கி துணைவேந்தர் முருகேச பூபதி பேசியதாவது :
விவசாயிகள் வயது வரம்பு இல்லாமல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் சார்பில் கடந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வரும் 3 ஆண்டு கால பி.எப்., டெக்னாலஜி பட்டய படிப்பில் சேரலாம். இதன் மூலம் அனைத்து விவசாயிகளும் பட்டயம் பெற முடியும்.

பெண் விவசாயி உமா பேசும் போது, பட்டய படிப்பிற்கான கட்டணம் அதிகமாக உள்ளது, குறைக்க வேண்டும் மற்றும் விவசாயிகளுக்கு இந்த பட்டயபடிப்பு பற்றி விளம்பரம் செய்ய வேண்டும் என பேசினார். அவரது ஆலோசனையை ஏற்று 7500 ரூபாயாக உள்ள கட்டணம் 3500 ரூபாயாக குறைக்கப்படும்.
விவசாயிகள், வேளாண் அறிவியல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள தொடுதிரை கணினி மூலம், பருவத்திற்கேற்ற என்ன பயிர் ரகம் , என்ன உரம்? எவ்வளவு போடுவது, விளை பொருட்களை எங்கு விற்பனை செய்வது பற்றிய தகவல்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

மார்கெட் நிலவரம், பூச்சி, நோய் அறிகுறிகள், விஞ்ஞானிகளின் பரிந்துரைகள், அரசுத்துறை திட்டங்கள் உள்பட அனைத்து விவரங்களும் எளிய தமிழில் தெரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக இயக்குனர் கதிரேசன், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக இயக்குனர் கலைச்செல்வன், பெங்களூரு இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக முதன்மை விஞ்ஞானி சாய்ராம் மற்றும் அறிவியல் சார் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். தொழில் நுட்ப வல்லுனர் ரேணுகா நன்றி கூறினார்.

## உழவர் பெருவிழா கோலாகலம் : பயன்பெற விவசாயிக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:55 IST

நாமக்கல்: "விவசாயிகள், உழவர் பெருவிழாவில் பங்கேற்று பயன்பெறலாம்' என, நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட உழவர் பெருவிழா, கடந்த 13ம் தேதி துவங்கி ஏப்ரல் 17ம் தேதி வரை நடக்கிறது.
மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வடிப்பகுதி வளர்ச்சி திட்டங்கள் மூலமாக இயற்கை வளங்களான நிலம், நீர், தாவரங்கள் பெருக்குவதற்கான வழிமுறைகள் தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டு, அது தொடர்பான கையேடு மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் திட்டம் வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, எருமப்பட்டி, மோகனூர், பரமத்தி மற்றும் கபிலர்மலை வட்டாரங்களிலும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், மல்லசமுத்திரம், எலச்சிபாளையம் வட்டாரங்களிலம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம், கொல்லிமலை, நாமகிரிப்பேட்டை, பள்ளிபாளையம், ராசிபுரம் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம், திருச்செங்கோடு வட்டாரத்திலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் நிலசமன்படுத்துதல், சமஉயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற நிலவள மேம்பாட்டு பணிகளும், பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவுநீர் குட்டை அமைத்தல், தடுப்பணைகள் அமைத்தல், கால்நடைக் குட்டை அமைத்தல், வரத்து வாய்க்கால் சீரமைத்தல், அமிழ்வுக்குட்டை அமைத்தல் போன்ற நீர்வள மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோல், வேளாண் காடுகள் வளர்த்தல், பழக்கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல்விளக்கத்திடல் அமைத்தல் போன்ற தாவர வள மேம்பாட்டு பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள, இவ்விழாவில் விவசாயிகள், மக்கள் பங்கேற்று பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வாழைத்தார் விலை "கிடுகிடு' : விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:55 IST

கருத்தை பதிவு செய்ய

ப.வேலூர்: தினசரி மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால், வாழைத்தார் விலை, "கிடுகிடு' என உயர்ந்தது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ப.வேலூர் சுற்று வட்டார பகுதியான, பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, நன்செய் இடையாறு, பொய்யேரி உள்ளிட்ட காவிரிக்கரையோர பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில், வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன் போன்ற ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட வாழைத்தார், ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு கொண்டு வரப்பட்ட வாழைத்தார்களை, நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர், திருச்சி போன்ற பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்து விற்பனைக்காக லாரிகளில் அனுப்புகின்றனர்.

வரத்து அதிகரிக்கும் போது, வாழைத்தார் விலை வீழ்ச்சி அடைவதும், குறைவாக இருக்கும் போது, விலை தாறுமாறாக உயர்வதும் வாடிக்கையாக அரங்கேறி வருகிறது. அதேபோல், இந்த வாரம் வாழைத்தார் வரத்து குறைவால், அதன் விலையும் அதிகரித்து, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நேற்று நடந்த ஏலமார்க்கெட்டில், கடந்த வாரம், 300 ரூபாய்க்கு ஏலம் போன பூவன் வாழைத்தார், 400 ரூபாய்க்கு ஏலம் போனது. 200 ரூபாய்க்கு விற்பனையான கற்பூரவள்ளி ஒரு தார், 250 ரூபாய்க்கு ஏலம்போனது. 200 ரூபாய்க்கு ஏலம்போன ரஸ்தாளி ஒரு தார், 260 ரூபாய்க்கு விலைபோனது.

அதேபோல், 150 ரூபாய்க்கு ஏலம்போன பச்சநாடன் ஒரு தார், 200 ரூபாய்க்கு விலைபோனது. தினமும், 1,200 முதல், 1,500 வாழைத்தார் வரை குவியும் மார்க்கெட்டில் இந்த வாரம், 400 வாழைத்தார் மட்டுமே வந்ததால், இந்த விலை உயர்வுக்கு காரணம் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.வாழைத்தார் விலை உயர்ந்ததால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஆத்மா' திட்ட அறிமுக பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:09 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை சார்பில் ஆத்மா திட்ட புதிய நியமன அலுவலர்கள் மற்றும் வேளாண் துறையினருக்கு ஆத்மா திட்ட அறிமுக பயிற்சி

மற்றும் திட்டம் வரைவு தயாரித்தல் பற்றிய பயிற்சி முகாம் நடந்தது.
வேளாண் இணை இயக்குனர், திட்ட இயக்குனர் மனோகரன் தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வரவேற்றார். பயிற்சியை துவக்கி வைத்து, திட்ட இயக்குனர் மனோகரன் பேசியதாவது:
இத்திட்டம் அனைத்து துறையினர், விஞ்ஞானிகள், விவசாயிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தை ஒவ்வொரு விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும். ஒவ்வொரு விவசாயிகளும் விளைச்சலை இரு மடங்காக்கி, வருமனத்தை மூன்று மடங்காக்க நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும்.
இவ்வாறு பேசினார்.

வேளாண் மண்டல ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் விஜயபாஸ்கரன், திட்ட அறிமுகம், திட்ட எதிர்கால நோக்கம், திட்டமிடுதல், வரைவு தயார் செய்யும் முறை, செயலாற்றும் முறை குறித்து விளக்கினார்.
வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் ஜான்சிராணி, கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் மீனலோசனி, வேளாண் துணை இயக்குனர் மாது, வேளாண் துணை இயக்குனர் செல்வம் ஆகியோர் துறை திட்டங்கள் குறித்து பேசினர்.
பயிற்சியில், ஆத்மா திட்ட புதிய நியமன அலுவலர்கள், வேளாண் துறை, தோட்டக்கலை துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை துறை, பட்டு வளர்ச்சி துறை மற்றும் மீன் வளத்துறையை சேர்ந்த 75 அலுவலர்கள் பங்கேற்றனர். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் அமுதவள்ளி நன்றி கூறினார்.

## வெளி மாநிலங்களுக்கு மக்காச்சோளம் ஏற்றுமதி : கி.கிரி., மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:19 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் 8,000 டன் மக்காச்சோளம், பிஸ்கட், மாவு உணவு பொருட்கள் மற்றும் எண்ணெய் தயாரிக்க வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது.
சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி அதிகளவு நடக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் 3 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்கின்றனர். மாவட்டத்தில் ஓசூர், பாகலூர், மருதனப்பள்ளி, கிறிஸ்துபாளையம், தளி, தேன்கனிக்கோட்டை பகுதியில் அதிகளவு சாகுபடி நடக்கிறது. மக்காச்சோளத்தை பொறுத்தவரையில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யக்கூடிய உணவு பயிராக

விளங்குகிறது. சாகுபடி செய்த 90 நாளில் அறுவடை செய்யலாம் என்பதால், குறுகிய காலத்தில் வருமானத்தை குறி வைத்து விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வமடைந்துள்ளனர். ஓசூர் தாலுகாவில் உற்பத்தியாகும் மக்காச்சோளம், வடமாநிலங்களுக்கு பிஸ்கட், மாவு உணவு பொருட்கள் தயாரிக்கவும் ஏற்றுமதியாகிறது. நாமக்கல், கோவை மாவட்டங்களில் கறிக்கோழி தீவனத்திற்காக கோழி பண்ணைகளுக்கும் ஏற்றுமதியாகிறது. கடந்த காலத்தில் மக்காச்சோளம் உணவு பயிராக மட்டும் பயன்படுத்தப்பட்டதால் எதிர்பார்த்த விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலையடைந்தனர். தற்போது, எண்ணெய் தயாரிப்பதற்கும், கோழி பண்ணைகளுக்கு அதிகளவு மக்காச்சோளம் ஏற்றுதியாவதால், ஆண்டு முழுவதும் நிலையான விலை கிடைக்கிறது. ஏக்கருக்கு 4 டன் மகசூல் கிடைக்கிறது.
தற்போது மக்காசோளம் சாகுபடியில் ஹைபீரிட் விதைகள் வந்துள்ளதால், அவற்றை வேளாண்மை துறை அறிவுறுத்தும் புதிய தொழிட்நுட்ப முறையில் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

இதுகுறித்து ஓசூர் வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: கடந்த காலத்தில் மக்காச்சோளம் கதிர் சாப்பிட மட்டும் பயன்படுத்தினர். தற்போது அவற்றில் இருந்து பல்வேறு வகை மாவு பொருட்கள், பிஸ்கட், எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. கோழிகளுக்கு உணவு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. மாட்டுக்கு அறுவடை செய்தபின் மீதமாகும் சோள கட்டு தீவனமாக போடப்படுகிறது. விறகாகவும் பயன்படுத்தலாம். இவ்வாறு பல்வேறு வகை பயன்பாட்டிற்கு மக்காச்சோளம் பயன்படுவதால், விவசாயிகளுக்கு நிறைவான வருவாய் கிடைக்கிறது.
மானவாரியில் மட்டும் மக்காச்சோளம் மாவட்டத்தில் 1,800 ஏக்கர் சாகுபடி செய்யப்படுகிறது. ஒற்றை கதிர் மற்றும் இரட்டை கதிர் மகசூல் வழங்கக்கூடிய வீரிய ரக விதைகள் சந்தைக்கு வந்துள்ளன. வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் விட்டால் போதுமானது. விதைப்பிற்கு ஏக்கருக்கு 6 கிலோ விதைகள் தேவைப்படுகிறது.
ஒரு கிலோ விதை தற்போது 30 ரூபாய் முதல் ரகத்தை பொறுத்து 100 ரூபாய் வரையுள்ளது. சாகுபடி செய்ய ஏக்கருக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஏக்கருக்கு 4 டன் மகசூல் கிடைக்கிறது. ஒரு டன் 8 ஆயிரம் ரூபாய் வீதம் ஏக்கருக்கு 32 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. சாகுபடி மற்றும் பராமரிப்பு செலவு போக 25 ஆயிரம் ரூபாய் 90 நாளில் லாபம் கிடைக்கிறது. மாவட்டத்தில் மொத்தம் ஆண்டு தோறும் 8,000 டன் மக்காசோளம் உற்பத்தியாகிறது. தற்போது ஆண்டுதோறும் சாகுபடி பரபரப்பு அதிகரித்து வருவதால், நடப்பாண்டு மேலும் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கால்நடை தீவனத்திற்கு கடும் பற்றாக்குறை : ஆடு, மாடுகளை அடிமாடு விலைக்கு விற்கும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:19 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக வீசும் கடும் வெப்பத்தால் மேய்ச்சல் நிலங்கள் வறட்சியடைந்துள்ளதால், கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், ஆடு, மாடுகளை வளர்க்க முடியாமல் விவசாயிகள் அடிமாடு விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. வேளாண்மை துறை மூலம் நவீன இயந்திரங்களை கொண்டு பண்ணை எந்திரமயமாக்கல் திட்டம் மாவட்டத்தில் செயல்படுத்தினாலும் பல கிராமங்களில் விவசாய தேவைக்கு முழுவதுமாக காளை மாடுகள் பயன்படுத்தப்படுகிறது. வண்டி இழுத்தல், ஏர் உழுதல் உள்பட பல விவசாய பணிகளுக்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் பயன்படுத்தப்படுகிறது. பால் உற்பத்தியை அடிப்படையாக கொண்டு மாவட்டத்தில் 2 லட்சம் கறவை மாடுகள் உள்ளன. மேலும், காட்டு மாடுகளாக, 50 ஆயிரம் மாடுகள் வளர்க்கப்படுகிறது. மொத்தம் மாவட்டத்தில் மொத்தம் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட மாடுகளும், இரண்டு லட்சம் ஆடுகளும் வளர்க்கப்படுகிறது. மேலும், தற்போது தமிழக அரசின் சிறப்ப திட்டத்தின் கீழ், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகளும் 800 கறவை பசுக்களும் வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக கறவை மாடுகளுக்கு பால் கொடுக்கும் சத்து அளிப்பதற்காக பூசா போன்ற திட உணவுகள் குறைந்த அளவு வழங்கப்படுகிறது. மாடுகளின் வயிறு முழுமையாக நிரம்புவதற்கு அதற்கு வைக்கோல் புல் முக்கிய உணவாக இருக்கிறது. மாவட்டத்தில் வைக்கோல் புல் பெரும்பாலும் தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியில் மட்டுமே கிடைக்கிறது. மற்ற பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் மேய்சல் நிலங்களில் வளரும் புற்களையே நம்பி உள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட சராசரி மழை அளவு, 830.5 மி.மி., ஆகும். கடந்த ஆண்டு 850 சராசரி மழை அளவை விட அதிகமானதாக மழை பெய்தது. இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பிப்., மார்ச் ஆகிய மாதங்களில் குறிப்பிடத்தக்க மழை பெய்யவில்லை. இந்த காலக்கட்டத்தில் மழை பெய்தால்தான் நிலங்களில் ஈரப்பதம் அதிகரித்து புற்கள் துளிர் விடும். இந்த ஆண்டு கடந்த மூன்று மாதங்களாக மழை பெய்யாததால், மேய்சல் நிலைங்களில் புற்கள் துளிர்விடவில்லை. இதனால், கால்நடைகளுக்கு கடும் தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஊத்தங்கரை, மத்தூர், பர்கூர், கெலமங்கலம், தளி ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில் போதிய மழையின்மையால் நிலங்கள் காய்ந்துள்ளது. இங்கு கால்நடைகளை வளர்போர் புல்

தீவனங்கள் இல்லாததால் பனங்குருத்து மற்றும் நுங்கு காய்களை சீவி கால்நடைகளுக்கு உணவாக அளித்து வருகின்றனர். இனி வரும் நாட்களில் மாவட்டத்தில் மழை பெய்யாவிட்டால் கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்படும்.

## விவசாயிகளுக்கு உளுந்து: வேளாண் அதிகாரி வழங்கல்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:37 IST

கருத்தை பதிவு செய்ய

கும்பகோணம்: தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வேளாண்மை உத வி இயக்குனர் அலுவலகம் மூலமாக தமிழக முதல்வரின் தானே புயல் நிவாரணத்திற்காக விவசாயிகளுக்குரிய நிவாரணத்தொகை வழங்கப்பட்டது.

மேலும் விவசாய நெல் பாதித்ததால் அடுத்த பயிரான உளுந்து பயிரிடுவதற்கு சித்திரைப் பட்டத்திற்கான ஆடுதுறை - 5 உளுந்து விலையில்லாமல் இலவசமாக வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு திருவிடைமருதூர் வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தஞ்சை வேளாண் இணை இயக்குனர் இசட். முகம்மதுபஹிரியா திருவிடைமருதூர் வட்டார நாச்சியார்கோவில் விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## உழவர் விழாவில் பங்கேற்க விவசாயிகளுக்கு ஆர்வமில்லை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,00:21 IST

கருத்தை பதிவு செய்ய

கொடைக்கானல்:வேளாண் உற்பத்தியை பெருக்கும் விதமாக ஏப்.,13 முதல் கிராமங்களில் விவசாயிகள் பயன்பெறும் வகையில், உழவர் பெருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது. கொடைக்கானல் அருகே வில்பட்டி ஊராட்சியில் உழவர் பெருவிழா, ஒன்றியதலைவர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்தது. துணைத்தலைவர் பொன்னுத்துரை மற்றும் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். வில்பட்டி பகுதியில் விவசாயிகள் எண்ணிக்கை அதிகம் இருந்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே பங்கேற்றனர்.இதனால் கடமைக்காக நடத்தப்பட்ட விழாவாகவே அமைந்தது. தொடர்ந்து நடைபெற உள்ள உழவர் விழாக்களை பயனுள்ள வகையில் நடத்த, விவசாயிகளை அதிகம் பங்கேற்கசெய்ய அதிகாரிகள் முன்வரவேண்டும். அப்போது தான் அரசின் நோக்கம்

நிறைவேறும்.அதிகாரி ஒருவர் கூறுகையில், "தற்போது காய்கறி நடவு சீசன் என்பதால், அழைப்பு விடுத்தும் குறைந்தளவிலேயே விவசாயிகள் பங்கேற்றுள்ளனர், வரும் விழாக்களில் விவசாயிகள் திரளாக பங்கேற்க செய்ய உள்ளோம், என்றார்.

## சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,00:21 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி:பழநி வட்டார சிறுவிவசாயிகள் ஒரு ஏக்கர் பரப்பளவில் காய்கறி பயிரிட்டு அதில் சொட்டு நீர் பாசனம் அமைத்திருந்தால், அவர்களுக்கு 100 சதவிகிதம் மானியம் வழங்கப்படும், என தோட்டக் கலை உதவி இயக்குனர் சிவசாமி தெரிவித்தார். அவர் கூறியதாவது: சொட்டு நீர் பாசனம் செய்துள்ள சிறு விவசாயிகள் 200 பேருக்கு 100 சதவிகிதம் மானியதொகை வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவுவிற்கு காய்கறிகள் பயிரிட்டு அதில் சொட்டு நீர் பாசனம் அமைத்திருந்தால், அதற்கான செலவு 43 816 ரூபாய் முழுமையாக வழங்கப்படும்.பழநி வட்டராத்தில் முதன் முறையாக, ஒரு ஏக்கரில் தக்காளி பயிரிட்டு சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ள சித்திரைகுளம் விவசாயி தாசமுத்து க்கு மானியத் தொகை வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு 91 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. சிறு விவசாயிகள் இதன் மூலம் குறைந்த செலவில், தரமான காய்கறிகளை பயிரிட்டு அதிக லாபம் பெறலாம், என்றார்.

## சிறு குறு விவசாயிகளுக்கு ரூ.4 ஆயிரம் கோடி கடன்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,00:21 IST

கருத்தை பதிவு செய்ய

சாணார்பட்டி:சாணார்பட்டியில் உழவர் பெருவிழா கலெக்டர் வெங்கடாச்சலம் தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் வரவேற்றார். ஆர்.டி.ஓ., பெருமாள் முன்னிலை வகித்தார். அமைச்சர் விசுவநாதன் பேசியதாவது:உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவும், விவசாயிகள் வளம் பெறுவதற்காகவும், விவசாயத் துறையில் அரசு அறிவித்துள்ள மானியத்திட்டங்களை விவசாயிகள் முழுமையாக பெற்றுபயனடையவும் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது.

சிறுகுறு விவசாயிகள் குறுகிய கால கடன்களை பெறு வதற்காக நான்காயிரம் கோடி ரூபாய்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, என்றார். கால்நடை இணை இயக்குனர் சுப்பையா, கூட்டுறவு இணைப்பதிவாளர் வில்வசேகரன், தோட்டக்கலை துணைஇயக்குனர் சந்திரசேகரன், கால்நடை நோய்புலனாய்வு உதவிஇயக்குனர் ராஜேந்திரன், முன்னாள் எம்.பி., சீனிவாசன், தொகுதிச்செயலாளர் கண்ணன், ஒன்றியச் செயலாளர் ராமராசு, ஒன்றியத் தலைவர்கள் இன்பஜோதிசுப்பிரமணி, யோகமலர்உத்தமன், ஊராட்சித் தலைவர் குமாரலட்சுமி உட்பட பலர் பங்கேற்றனர்.

---

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *நாடு முழுவதுமாக 17 லட்சம் குடும்பங்கள் பயன் பெறும் பால்வள துறையின் மேம்பாட்டுக்காக உலக வங்கி 35.20 கோடி டாலர் கடன்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இந்திய பால்வளத் துறையின் மேம்பாட்டுக்காக உலக வங்கி 35.20 கோடி டாலர் (சுமார் ரூ.1,805 கோடி) கடன் வழங்க உள்ளது. இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கையொப்பமானது. தேசிய பால்வள ஆதரவு திட்டத்திற்கு வழங்கப்படும் இந்த நிதி உதவியால் நாடு முழுவதுமாக*

பால் உற்பத்தியை குடிசைத் தொழிலாக செய்து வரும் 17 லட்சம் குடும்பங்கள் பயன் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா முதலிடம்

நம் நாட்டு கிராமங்களில் உள்ள 14.70 கோடி குடும்பங்களில் பால் மற்றும் பால் பொருள்கள் உற்பத்தி துறையில் 7 கோடி பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளனர். பால் தொடர்பான தொழில் ஏதோ ஒரு விதத்தில் இவர்களுடைய வாழ்வாதாரமாக உள்ளது. இந்தியா, சர்வதேச அளவில், பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. ஆண்டுதோறும் நம் நாட்டில் சுமார் 11.20 கோடி டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இது, பெரும்பாலும் உள்நாட்டு தேவையை ஈடு செய்வதற்கே போதுமானதாக உள்ளது. எனவே பால் மற்றும் பால் பொருள்கள் விலையில் அதிக ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது சகஜமாக உள்ளது.

நம் நாட்டில், பால் உற்பத்தியில் ஆந்திரபிரதேசம், கர்நாடகம், பீகார், அரியானா, குஜராத், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன. பால் உற்பத்தியில் குஜராத் மாநிலம் முதலிடத்திலும், கர்நாடக மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளன.

வாழ்க்கைத் தரம்

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருவது, செலவிடும் வருவாய் அதிகரிப்பு போன்றவற்றால் நம் நாட்டில் பாலுக்கான தேவைப்பாடு கடுமையாக உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பால் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கவில்லையென்றால் பால் இறக்குமதியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக இந்தியாவும் இருக்கும் என அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் பசுமாடுகளின் பால் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது. பால் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளும், இன்னும் திருப்திகரமான அளவிற்கு மேம்படுத்தப்படவோ, நவீனமயமாக்கப்படவோ இல்லை.

கடந்த சில ஆண்டுகளாக பால் உற்பத்தி வளர்ச்சி விகிதம் சரிவடைந்து காணப்படுகிறது. 1990–களில் 4.3 சதவீதமாக இருந்த வளர்ச்சி வகிதம் 2000–ஆம் ஆண்டுக்குப் பிறகு 3.8 சதவீதமாக குறைந்துள்ளது. 2021–22–ஆம் நிதி ஆண்டில் பாலுக்கான தேவைப்பாடு 18 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவு தேவையை பூர்த்தி செய்ய வேண்டுமானால் அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் பால் உற்பத்தி ஆண்டுக்கு 5.5 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி காண வேண்டும். இந்தியாவில் பால் மற்றும் பால் பொருள்களுக்கான தேவைப்பாடு மிகவும் அதிகமாக உள்ளதால் பொதுவாக மிகக் குறைந்த அளவில்தான் இப்பொருள்களை ஏற்றுமதி செய்வது வழக்கம்.

இந்நிலையில் தேசிய பால்வள ஆதரவு திட்டத்திற்காக உலக வங்கி வழங்கும் கடன் உதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. உலக வங்கியின் கிளையான சர்வதேச மேம்பாட்டு சங்கம் 25 ஆண்டுகள் முதிர்வு அடிப்படையில் வட்டியில்லா கடன் வழங்கி வருகிறது. சில சமயம் 5 ஆண்டுகள் கூடுதலாக கருணை கால அவகாசமும் வழங்குகிறது.

இக்கிளையின் மூலம் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட உள்ளது. இதில் கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிப்பதும், சந்தைப்படுத்துதல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதும் முக்கிய அம்சங்களாக உள்ளன.

தேசிய பால்வள திட்டம்

தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் தேசிய பால்வள திட்டம் ஒன்றையும் உருவாக்கியுள்ளது. பசுக்கள், எருமை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிப்பது, கிராமங்களில் பால் கொள்முதல் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது, பால் பதப்படுத்தும் மையங்களின் திறனை மேம்படுத்துவது மற்றும் இத்துறையின் வளர்ச்சிக்காக சிறந்த கொள்கைள் மற்றும் ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

கறவை மாடுகளின் ஆரோக்கியத்தை மரபணு முறையில் மேம்படுத்துவது, மாடுகளின் இனப்பெருக்கத்திற்காக நீண்ட கால முதலீடு, கால்நடைத் தீவனங்களை முடிந்த அளவு சிறப்பாக பயன்படுத்துவது, விவசாயிகளுக்கு தகுந்த பயிற்சி, அவர்களுடைய இல்லங்களிலேயே பசு மாடுகளுக்கு செயற்கைமுறை சினையூட்டல் வசதி ஆகியவையும் இத்திட்டத்தில் பிரதான அங்கம் வகிக்கின்றன.

உலக வங்கியின் நிதி உதவி பெறும் தேசிய பால்வள ஆதரவு திட்டமானது தகுந்த முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் தேசிய பால்வள திட்டத்தின் முதல் கட்ட செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கும். இத்திட்டத்தில் நாடு முழுவதுமாக பால் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் 14 மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 40,000 கிராமங்கள் இணைக்கப்பட உள்ளன.

இதனால் 17 லட்சம் குடும்பங்கள் பலனடையும். இந்த மாநிலங்கள் நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 90 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளன.

அமைப்பு சாராத பிரிவு

இந்திய பால்வளத் துறையில் அமைப்பு சாராத பிரிவு பங்களிப்பு 85 சதவீதமாக உள்ளது என ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. நாடு முழுவதுமாக சப்ளை செய்யப்படும் பாலில் 50 சதவீதம் கிராமங்களில்தான் உற்பத்தியாகிறது.

உலக பால் உற்பத்தியில் நம் நாட்டின் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. நாட்டில் உற்பத்தியாகும் பாலில் 60 சதவீதம் திரவ வடிவிலும், 40 சதவீதம் வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம் உள்ளிட்ட திட வடிவிலும் பயன்படுத்தப்படுகிறது.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த பாலில் 50 சதவீதம் வீடுகளில் பயன்படுத்தப்பட்டு விடுகிறது. மீதமுள்ள 50 சதவீதம் பொது சந்தைக்கு வருகிறது.

## சர்க்கரை உற்பத்தி 10 சதவீதம் சரியும் சி.எம்.ஐ.இ. தகவல்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

கரும்பு பயிரிடப்படும் பரப்பளவு குறைய வாய்ப்புள்ளதால், நடப்பு நிதியாண்டில் சர்க்கரை உற்பத்தி 9.8 சதவீதம் குறையும் என இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சி.எம்.ஐ.இ) தெரிவித்துள்ளது.

கடந்த 2011–12–ஆம் நிதியாண்டில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை வழங்கப்படாததையடுத்து, அதிக லாபம் தரக்கூடிய பிற பயிர்கள் மீது அவர்களுக்கு ஆர்வம் அதிகரித்து வருவதால் கரும்பு பயிரிடப்படும் பரப்பளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக 2011–12–ஆம் நிதியாண்டில் சர்க்கரை உற்பத்தியில் 18 சதவீத வளர்ச்சி எதிர்பார்த்த நிலையில் 2012–13–ஆம் ஆண்டில் இது 9.8 சதவீதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சர்க்கரையை பிரதான மூலப்பொருளாக கொண்டு இயங்கி வரும் பானங்கள் தயாரிப்பு நிறுவனங்களின் வளர்ச்சி, நடப்பு நிதியாண்டில் 0.5 சதவீதமாகவே இருக்கும். இத்துறை 2011–12–ல் 15.8 சதவீத வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிகிறது.

அதேபோல், சர்க்கரை உற்பத்தியில் உப பொருளான பாகு கழிவின் அளவும் கணிசமாக குறைந்து தொழிற்சாலைகளில் பயன்படும் ஆல்கஹால் உற்பத்தியும் பாதிப்படையும். இருப்பினும் பால் பொருள்கள், பிஸ்கட், குளிர்பானங்கள், உடனடி உணவு கலவைகள் போன்றவற்றின் உற்பத்தி அதிகரிக்கும் என சி.எஸ்.ஐ. இ. கருத்து வெளியிட்டுள்ளது.